செம்பட்டி--மரக்கன்றுகள்,மஞ்சப்பை வழங்கல் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி இயற்கையை மீட்கும் முயற்சியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க துளிர் இல்லங்கள் அமைப்பினர் செயல்படுகின்றனர்.

1980ல் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தன்னார்வ நிறுவனம் தொடங்கப்பட்டது. ஆத்துார் வட்டார பகுதி கிராமங்களில் 10க்கு மேற்பட்ட இடங்களில் மாணவர் துளிர் இல்லங்கள் அமைப்பு செயல்படுகிறது.

அறிவியல் பரப்புதல் பரிசோதனைகள் செய்தல் அறிவியல் இதழ்கள் வாங்குதல் என்பன ஒரு புறம் இருந்தாலும் செம்பட்டி துளிர் இல்ல மாணவர் குழுவினர் சுற்றுச்சூழலை மீட்பு சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக மரக்கன்றுகள் நடுவது,மஞ்சப்பை வழங்குவது என தனி இயக்கமாக செயல்படுகிறது. சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன் உலக வெப்பமயமாதலை தடுக்க அதற்கான முயற்சிகள் நடக்கிறது.

இந்த அமைப்பில் அறிவியல் அறிஞர்கள், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள், மாணவர்கள், கூலி தொழிலாளர்கள், விவசாயிகள், டாக்டர்கள், பேராசிரியர்கள், என பல்வேறு தரப்பினரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

அதுமட்டுமில்லாமல் இந்த இயக்கத்தின் ஒரு பிரிவாக பள்ளி மாணவர்களுக்கான துளிர் இல்லம் திட்டம் செயல்படுகிறது. குக் கிராமங்களில் கூட இதற்கான கிளைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களை கொண்ட இக்குழுவிற்கு ஓர் வழிகாட்டி ஆசிரியர் இருக்கிறார்.

ஒவ்வொரு துளிர் இல்லத்திற்கும் இணைப்பு கட்டணமாக ரூ . 200 சொந்த செலவில் செலுத்துகின்றனர். முதற்கட்டமாக 11 இடங்களில் துளிர் இல்லங்கள் துவக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் கிராமங்களிலும் சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வை மாணவ சமுதாயத்தில் விதைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாலித்தீன் ஒழிப்பு, புகையில்லா சூழல், மஞ்சப்பை பயன்பாட்டின் அவசியம்,மரக்கன்று நடவு,பராமரிப்பின் முக்கியத்துவம் குறித்த நிகழ்ச்சிகளும் மக்கள் மத்தியில் நடத்தப்படுகிறது.

## இலவச மஞ்சப்பை வழங்குகிறோம்

மா.தங்கா கண்மணி, ஒருங்கிணைப்பாளர்,தமிழ்நாடு அறிவியல் இயக்க துளிர் இல்லங்கள் அமைப்பு: அறிவியல் என்பது மக்களுக்காக சுய சார்பிற்காக, மக்கள் ஒற்றுமைக்காக, நாட்டு முன்னேற்றத்திற்காக என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வரும் அறிவியல் சார்ந்த பிரசாரத்தில் முக்கிய பங்காற்றி வரும் இந்த இயக்கம், துளிர், சமம், ஜந்தர் மந்தர், அறிவு தென்றல், விழுது, விஞ்ஞான சிறகு உள்ளிட்ட கல்வி, விழிப்புணர்வு பருவ இதழ்களை நடத்தி வருகிறது.

குழந்தைகள் அறிவியல் மாநாடு, ஒவ்வொரு ஆண்டும் துளிர் திறனறி தேர்வு ஆகியவற்றை நடத்தி வருகிறது.

பல்வேறு பொது விழாக்களிலும் இவற்றின் பலனை உணர்த்தும் வகையில் மரக்கன்று மஞ்சப்பை இலவசமாக வழங்கும் முயற்சியை தொடர்ந்து சில ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறோம்.

## மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு

கருப்பையா, வழிகாட்டி ஆசிரியர்: தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் நடத்தப்படும்

துளிர் இல்லங்கள் வெறுமனே பாடமாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல் வாழ்க்கை முறை சார்ந்த அறிவியலுடன் உள்ள தொடர்பை அனுபவபூர்வமாக அறிந்துகொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

மாதந்தோறும் வாசிப்பு திறன், புதிர், நடப்பு அறிவியல் கண்டுபிடிப்புகள், விளையாட்டு, அறிவியல் சோதனைகள், மந்திரமா தந்திரமா உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. சுற்றுச்சூழலை மீட்டெடுக்கும் நிகழ்ச்சிகளும் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் போட்டிகளும் நடத்தி பரிசுகள் வழங்குகிறோம்.

அறிவியல் இயக்கம் மூலம் மாவட்ட, மாநில, தேசிய போட்டிகளில் பங்கேற்றல் குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் பங்கேற்பு போன்ற வாய்ப்புகள் கிடைக்கிறது.

மாணவர்களுக்கு மரக்கன்றுகள் நடவு, சுற்றுச்சூழலில் பாலிதீன் குறித்த விழிப்புணர்வு, தடை செய்யப்பட்ட பாலிதீன் பொருட்கள் சார்ந்த பிரசாரம், மஞ்சப்பை பயன்படுத்த வலியுறுத்தல், குப்பைகளை தரம் பிரித்து வழங்க வழிகாட்டுதல், தண்ணீர் சிக்கனம், மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பு போன்றவை தொடர்பாக விழிப்புணர்வு ஆலோசனைகளை வழங்கி வருகிறோம்.